# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of District Munsif cum Judicial Magistrate No. I, Usilampatti**

**Case No. 4/2023**

**Deposition of Witness for Prosecution : PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **பாலமுருகன்** | Caste | : | |
| Father/Husband Name | : | **மாரியப்ப கவுண்டர்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(all accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.02.2026**

**முதல் விசாரணை** :

நான் ஹைதராபாத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். 26.02.2020ம் தேதி M.P. பழனி திருமண மஹாலில் வைத்து எனது மகளை 1வது எதிரிக்கு திருமணம் செய்து வைத்தோம். எனது மகளுக்கு 60 பவுன் நங்க நகையும், 1வது எதிரி 6 பவுன் நகைகளும் கொடுத்தோம். கைகடிகாரம் மற்றும் சீர்வரிசை பொருட்கள் ரூபாய் 6 லட்சத்திற்கு வாங்கி கொடுத்தோம். அதன்பின்னர் 1வது எதிரிக்கு ே◌ஹாட்டல்வைக்க வேண்டும் என்று அதற்கு ரூபாய் 15 லட்சம் வேண்டுமென்றும் கேட்டார்கள். அதையும் 1 முதல் 3 வரையிலான எதிரிகளிடம் கொடுத்தோம். எனது மகளை வளைகாப்பிற்கு அழைத்து சென்றோம். பின்னர் பெண் குழந்தை பிறந்தது. ஆறு மாதம் கழித்து எனது மகளை எதிரியின் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். பின்னர் எங்களது சொத்துக்களை அடமானம் வைக்க வேண்டுமென்று

பத்திரத்தை வாங்கி வருமாறு எனது மகளை துன்புறுத்தினார்கள். நாங்கள் தராததால் 1வது எதிரி தினமும் குடித்துவிட்டு வந்து எனது மகளை அடித்து வந்தார். அந்த சமயம் கொரானா காலம் என்பதால் எங்களால் வர இயலவில்லை. அப்போது எனது மகள் 2வது முறை கர்ப்பமாக இருந்தார். ஆனால் 1 முதல் 3 வது எதிரிகள் மேற்படி கருவை கலைத்து எங்களது சொந்த ஊரில் எனது சித்தப்பா வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டார்கள்.பின்னர் எனது மகளை ஹைதராபாத்திற்கு அழைத்து சொன்றுவிட்டோம். மூன்று மாதம் கழித்து சமாதானமாக பேசி எனது மகளை மீண்டும் அழைத்து வந்தார்கள். மீண்டும் எனது மகள் கர்ப்பமடைந்தார். அப்போது 1வது எதிரி தினமும் குடித்துவிட்டு நள்ளிரவு நேரத்தில்பிரச்சனை செய்தார் ஆன்லைன் சூதாட்டத்தில் விளையாடி பணத்தை இழந்தார். பின்னர் மேற்படி பிரச்சனைகள் தெரிந்து எனது சகலை மணிகண்டன் மற்றும் எனது அண்ணன் சுப்ரமணியன் ஆகியோர்கள் சென்று பார்த்த போது அவர்களிடமும் 1 முதல் 3 எதிரிகள் தகாத வார்த்தையால் திட்டி பிரச்சனை செய்தார். ஆன்லைனில் சூதாடி கடன் வாங்கி அவருடைய ஆபாச புகைப்படம் அலைபேசியில் பரவியது மேலும் எங்களது சொத்துக்கள் மற்றும் தாலி கொடியையும் விற்று செலவு செய்து விட்டார். இதுசம்பந்தமாக நாங்கள் 1வது எதிரியின் அப்பாவிடம் சொன்னதற்கு தன்னால் எதுவும் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார். எனது மகள் தான் 1வது எதிரியை கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டார். 1வது எதிரிக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு உள்ளது. அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளது. பின்னர் எதிரிகள் மீது புகார் கொடுத்துவிட்டு எனது மகளை எனது வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நாங்கள் தெலுங்கானா மாநிலத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். ரூபாய் 15 லட்சம் அ.சா.1 எங்களிடம் கேட்டதை வைத்து தான் எங்களுக்கு தெரியும் முதலில் பலர் மூலம் தகவல் தெரிந்துகொண்டு வந்தோம். நான் புகாரில் கையெழுத்து போடவில்லை. நகை சம்பந்தமாக ரசீதை காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை. மேற்படி பணம் கொடுத்ததிருக்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் எழுதி வாங்கினோமா என்றால் இல்லை. புகைப்படம் எதுவும் எடுத்தமோ என்றால் இல்லை. எனது மகள் எங்களுக்கு தகவல் கொடுத்து 15 நாட்கள் கழித்து தமிழ்நாட்டிற்கு வந்தோம். என்னிடம் புகாரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 எனது மகள் என்பதால் அ.சா.1 கொடுத்த புகாருக்கு ஆதாரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d. Balamurugan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.